Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654


# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 130 | வியாழக்கிழமை Thursday | 12.03.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# 9 லட்சம் குடும்பங்களுக்கு குழாய் கேஸ் இணைப்பு

## திருச்சியில் பிரதமர் மோடி தகவல்




திருச்சி மாவட்டம் பஞ்சபூரில் நடைபெற்ற அரசு விழாவில்,ரூ.5,650 கோடி மதிப்பிலான நலத் திட்டங்களை பிரதமர் நரேந்திர மோடி (மார்ச் 11) தொடக்கி வைத்தார்.

நீலரிகி,ஈரோட்டில்ரூ. 3,680 கோடி மதிப்பிலான எரிவாயு விநியோக வலையமைப்பு உள்ளிட்ட புதிய திட்டங்களையும் மோடி தொடக்கி வைத்தார். கிராமப்புறசாலைகளை மேம்படுத்தும் வகையில் 370 கி.மீ. சாலை திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாட்டிற்கு 2 அம்ரித் பாரத் விரைவு ரயில்கள், 2 விரைவு ரயில்கள் மற்றும் ஒரு பயணிகள் ரயில் சேவையை காணொலி வாயிலாகத் தொடக்கி வைத்தார்.

நாகர்கோவில் – சார்லபள்ளி அம்ரித் பாரத் சிறப்பு ரயில் (06357),கோவை போத்தனூர் – தன்பத் அம்ரித் பாரத் சிறப்பு ரயில் (06619), ராமேசுவரம் – மங்களூர் சிறப்பு விரைவு ரயில் (06621), திருநெல்வேலி – மங்களூர் சிறப்பு விரைவு ரயில்(06708),மயிலாடுதுறை – காரைக்குடி சிறப்பு பயணிகள் ரயில் (06835) ஆகிய 5 ரயில் சேவைகளைத்தொடக்கிவைத்தார்.

இதனைத் தொடர்ந்து பிரதமர் மோடி பேசியதாவது:

"திருச்சிக்கு வருகை தந்ததில் மகிழ்ச்சி. இன்றைய நிகழ்ச்சி தமிழ்நாட்டிற்கு மிக முக்கியமானது.

பாரத் பெட்ரோலியம் நிறுவனம் மூலம் திட்டங்கள் அடிக்கல் நாட்டப்படுவதில் மகிழ்ச்சி. பெட்ரோலிய திட்டங்கள் மூலம் காற்று மாசுபாடு குறையும்;சுற்றுச்சூழல்பாதுகாக்கப்படும்.

கடந்த ஆண்டு கங்கை கொண்ட சோழபுரம் வந்திருந்தேன்.

விவசாயிகள் முதல் மாணவர்கள் வரை பயன்பெறுகின்றனர்.

4 கோடி மரங்களை நடுவதற்கு இணையாக இயற்கை எரிவாயுத் திட்டம் இருக்கும். இந்த கட்டமைப்பு 9 லட்சம் குடும்பங்களுக்கு குழாய் மூலம் நேரடியாக கேஸ் (சமையல் எரிவாயு) வழங்குவதை உறுதி செய்யும்.

இத்திட்டத்தின் மூலம் 200 வணிக நிறுவனங்களுக்கு எரிவாயு கிடைக்கும். 201 இயற்கை எரிவாயு நிலையங்கள் நிறுவப்படும்.இந்தத்திட்டங்கள் மூலம் எரிசக்தித் திறன் அதிகரித்து போக்குவரத்து வசதிகள் மேம்படும்.

கடந்த வாரம் மதுரை வந்தபோது அம்ருத் பாரத் திட்டத்தின்படி 8 ரயில் நிலையங்களைத் தொடக்கிவைத்தோம். இன்று பல புதிய ரயில்கள் தொடக்கி வைக்கப்பட்டுள்ளன. இவை தென் மாவட்டங்களை மற்ற பகுதிகளோடு இணைக்கிறது.

இதனால், உள்ளூர் பொருளாதாரம் அதிகரிக்கும். இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அதிகரிக்கும். சுற்றுலாத் துறை மேம்படும். தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு முழு அர்ப்பணிப்போடு மத்திய அரசு உழைக்கிறது" எனக் குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டிற்கு புதிதாக 5 ரயில் சேவைகளை பிரதமர் நரேந்திர மோடி (மார்ச் 11) தொடக்கி வைத்தார்.

2 அம்ரித் பாரத் விரைவு ரயில்கள், 2 விரைவு ரயில்கள் மற்றும் ஒரு பயணிகள் ரயில் சேவையை காணொலி வாயிலாகத் தொடக்கி வைத்தார்.

நாகர்கோவில் – சார்லபள்ளி அம்ரித் பாரத் சிறப்பு ரயில் (06357),கோவை போத்தனூர் – தன்பத் அம்ரித் பாரத் சிறப்பு ரயில் (06619), ராமேசுவரம் – மங்களூர் சிறப்பு விரைவு ரயில் (06621), திருநெல்வேலி – மங்களூர் சிறப்பு விரைவு ரயில்(06708),மயிலாடுதுறை – காரைக்குடி சிறப்பு பயணிகள் ரயில் (06835) ஆகிய 5 ரயில் சேவைகளைத்தொடக்கிவைத்தார்.

முன்னதாக, இந்த பொதுக்கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி, அன்புமணி ராமதாஸ், டிடிவி தினகரன், நயினார் நாகேந்திரன் உள்ளிட்ட என்டிஏ கூட்டணிக் கட்சி தலைவர்களும் உரையாற்றினர். முன்னதாக, பஞ்சப்பூரில் நடைபெற்ற அரசு விழாவில், சென்னையை அடுத்த மணலியில் ரூ.1,490 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள இந்தியன் ஆயில் நிறுவனத்தின் மசகு எண்ணெய் கலவை ஆலையை மோடி நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

# நான் முதல்வன் திட்டத்தால் யுபிஎஸ்சி தேர்வில் வெற்றி பெறுவோர் எண்ணிக்கை உயர்வு

## முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பெருமிதம்




சென்னை: 'நான் முதல்வன் திட்டம்' மூலம் யுபிஎஸ்சி தேர்வில் வெற்றி பெறுவோரின் எண்ணிக்கை உயர்ந்துள்ளதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்தார்.

அகில இந்திய குடிமைப் பணி தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கான பாராட்டு விழா, சென்னை விக்டோரியா பொது அரங்கத்தில் (மார்ச் 11) நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க .ஸ்டாலின் பேசுகையில், "யுபிஎஸ்சி தேர்விற்காக கடுமையாக உழைத்து, அதில் வெற்றி பெற்றிருக்கக் கூடிய அனைவருக்கும் என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் படைத்திருப்பது சாதாரண சாதனை இல்லை. இந்தியாவிலேயே ஏன், உலகிலேயே மிகவும் கடினமான தேர்வு என்று UPSC தேர்வைத்தான் சொல்வார்கள். இதற்கு தயாராகின்றவர்களின் மன வலிமையையும், ஒழுக்கத்தையும் சோதித்துப் பார்க்கக் கூடிய கடுமையான தேர்வு. அப்படிப்பட்ட தேர்வை உங்களில் சிலர் முதல் முயற்சியிலேயே தேர்ச்சி பெற்றிருக்கிறீர்கள். சிலர் பல ஆண்டுகள் முயற்சிக்குப் பிறகு வெற்றியடைந்திருக்கிறீர்கள்.

ஆனால்,சிலவருடங்களுக்கு முன்னால் என்ன நிலை இருந்தது என்று அனைவருக்கும் நன்றாக தெரியும். தமிழ்நாட்டிலிருந்து யுபிஎஸ்சி தேர்வில் வெற்றியடையும் மாணவர்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து கொண்டே வந்தது. நம்முடைய திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற பிறகு, அதனை உடனடியாக சரி செய்ய வேண்டுமென பல்வேறு முயற்சிகளை எடுத்தோம்.

நான் முதல்வன் திட்டத்தின் கீழ், ஊக்கத்தொகை, உயர் பயிற்சி, நேர்முகத் தேர்வுகளை எதிர் கொள்ளக் கூடிய சிறப்பு பயிற்சி என்று பல்வேறு முன்னெடுப்புகளை நம்முடைய அரசு எடுத்தது. அந்த முயற்சிகளுக்கு, அண்மைக்காலமாக நல்ல பலன் கிடைத்து வருகிறது. அதற்காக உழைத்த அதிகாரிகளுக்கும், பயிற்சியாளர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் தான் Silent Heros. இந்த ஆண்டு 60 பேர் நம்முடைய மாநிலத்திலிருந்து தேர்வாகியிருக்கிறீர்கள். அதில், 56 பேர் நான் முதல்வன் திட்டத்தால் பயனடைந்தவர்கள் என்பது கூடுதல் மகிழ்ச்சி. என்னைப் பொறுத்தவரை, இந்த எண்ணிக்கை இன்னும் உயர வேண்டும். உங்களை 'ரோல் மாடலாக' எடுத்துக் கொண்டு, இன்னும் பல இளைஞர்கள் தமிழ்நாட்டிலிருந்து இந்தியா முழுவதும் பல மாநிலங்களுக்கு சென்று, பல்வேறு மாவட்டங்களில், ஆட்சியராக, பல்வேறு துறைகளில் செயலாளராக, நாட்டின் வளர்ச்சிக்கும் எளிய மக்களுக்கும் பணியாற்ற வேண்டும்.

ஏன், வெளிநாடுகளுக்கும் இந்தியத் தூதர்களாக சென்று, நாடுகளுக்கு இடையிலான நல்லுறவை மேம்படுத்த வேண்டும்.

பொதுவாக, ஆட்சியில் இருக்கக் கூடிய நாங்கள் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தலை சந்தித்து மக்களின் நம்பிக்கையைப் பெற வேண்டும்.

ஆனால், யுபிஎஸ்சி தேர்வில் வெற்றியடைந்த ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ்., போன்ற பொறுப்புகளில் அமரும் உங்களுக்கு அப்படிப்பட்ட ஒரு தேவை அமையவில்லை. 30 ஆண்டுகளுக்கும் மேல் தொடர்ச்சியாக பணியை செய்யக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. இந்த வாய்ப்பு உங்களை மேலும் பொறுப்புடையவர்களாக உயர்த்த வேண்டும். அடக்கத்தையும், மனிதநேயத்தையும் வளர்க்க வேண்டும். அதிகாரிகள் என்றால் அலட்டலாக இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை. சாதாரண மக்களிடம் கூட அன்பாக, பண்பாக நடந்து கொண்டால் அதுதான் உங்கள் பெயரை காலத்திற்கும் நிலைக்க செய்யும். அப்படி, அன்பும், அடக்கமும், சமூகநீதி பார்வையும் அடிப்படையாக வைத்து இந்தியாவின் ஏற்றத்திற்கு நீங்கள் ஒவ்வொருவரும் உழைப்பீர்கள், தமிழ்நாட்டிற்கு பெருமையை தேடித் தருவீர்கள் என்று நம்புகிறேன். இனிமேல், உங்களின் வாழ்க்கை மிகவும் Busy-ஆக மாறிவிடும். ஓய்வு என்பதே பெரும்பாலும் கிடையாது. அப்படிப்பட்ட கேரியரை தேர்ந்தெடுத்திருக்கும் உங்களுக்கு ஒரு அட்வைஸ், அதிகாரிகளாக நீங்கள் நாட்டை கவனிக்க வந்து விட்டாலும், உங்கள் வீட்டையும், குடும்பத்தையும் அதே அக்கறையுடன் கவனித்துக் கொள்ள வேண்டும். எவ்வளவு பிஸியாக இருந்தாலும், உங்கள் அப்பா–அம்மாவிற்கு, வாழ்க்கைத் துணைக்கு, குழந்தைகள் இருந்தால் அவர்களுக்கும் ஒரு 5 நிமிடம் குறைந்தபட்சம் ஒரு ஃபோனாவது செய்து "சாப்பிட்டீர்களா? மருந்து,மாத்திரை எடுத்துக் கொண்டீர்களா?" என்பதை அக்கறையுடன் கேட்க வேண்டும்.

உங்கள் கனவு நிறைவேறிவிட்டது, இனி மக்களின் கனவுகளை நிறைவேற்ற புறப்படுங்கள். All the Best! உங்களை போல இன்னும் பலரை நம்முடைய திராவிட மாடல் அரசு உருவாக்குவதற்கு தொடர்ந்து துணை நிற்கும்" என்றார்.

# தீவிரமடையும் சிலிண்டர் தட்டுப்பாடு உணவுத்துறை அமைச்சர் ஆலோசனை



"மாஸ்க்கோவில் மழை பெய்தால் கம்யூனிஸ்டுகள் மதுரையில் குடைபிடிப்பார்கள்" என பகடியான ஒரு சொல்லாடல் உண்டு. ஆனால் அதுதான் தற்போது நிஜமாகியிருக்கிறது. ஈரான் – அமெரிக்கா போர் நமது வீடு வரை வந்து நமது வாழ்வியலை பாதிக்கிறது. உலகின் எல்லா நாடுகளும் ஏதோ ஒரு தேவைக்காக பிற நாடுகளை சார்ந்தே உள்ளன. 100 சதவீத தன்னிறைவு என்பது சாத்தியமற்றது. ஆனால் அமெரிக்கா இஸ்ரேலின் எதேச்சதிகார போக்கு தற்போது நீண்டகால போருக்கு வழி வகுத்துவிட்டது. அமெரிக்காவின் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக ஈரான் வளைகுடா நாடுகளை தாக்க துவங்கியது. இதனால் போர் மேற்காசியா முழுவதும் பரவியது. உலகின் மிக முக்கியமான எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையான அரம்கோவை தாக்கியதால், எண்ணெய் வர்த்தகம் மேலும் முடங்கியது. அதோடு ஈரான் 'ஹார்மூஸ்' நீர்முனையை மூடியதோடு ஒரு சொட்டு எண்ணெய் கூட வெளியேறாது எனவும் சொல்லிவிட்டது.

இதன் எதிரொலியாக எல்.பி.ஜி சிலிண்டர் தட்டுப்பாடு நாடு முழுக்க அதிகரித்துள்ளது. ஏற்கனவே மும்பையில் 30 சதவீத ஹோட்டல்கள் நேற்றே மூடப்பட்டன. தமிழகத்தில் நாளுக்கு நாள் சூழ்நிலை தீவிரமடைந்து வருகிறது. இங்கு வணிக சிலிண்டர் தட்டுப்பாடு காரணமாக ஹோட்டல்கள் மூடக்கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது. சென்னை தலைமைச் செயலகத்தில் உணவுத்துறை அமைச்சர் சக்கரபாணி தலைமையில் தமிழ்நாடு ஹோட்டல் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் கேஸ் நிறுவனங்களின் பிரதிநிதிகள், கேட்டரிங் உரிமையாளர்கள் உடனான ஆலோசனை கூட்டம் நடைபெற்று வருகிறது.

இக்கூட்டத்தில் தமிழ்நாட்டில் இன்னும் எத்தனை நாட்களுக்கு சமையல் எரிவாயு இருப்பில் உள்ளது மற்றும் அதனை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து பேசப்பட உள்ளது. ஹோட்டல் சங்கங்களில் பிரதிநிதிகளுடன் மாற்று வழியை பயன்படுத்துவது குறித்து பேசப்பட உள்ளது. இந்த கூட்டத்தில் தலைமை செயலாளர், உணவுத்துறை செயலாளர் பழனிசாமி, மின்வாரிய தலைவர் ராதாகிருஷ்ணன், தொழிற்துறை செயலாளர் அருண் ராய் உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர்.

**செய்திகள்**
**உடனுக்குடன் படிக்க**
**தினத்தளம்**
DHINATH DHALAM
**வாட்ஸ் அப் குரூப்பில்**
**இணையுங்கள்**

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதிக்குதமிழகவாழ்வுரிமைகட்சியின்சார்பாக அக்கட்சியின்மொடக்குறிச்சிதொகுதி பொறுப்பாளர் ஆலயம் ரா.கார்த்திகேயன் அவர்கள் சென்னையில் அமைந்துள்ள அக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் 100326 அன்று விருப்பமுனு கட்சியின் நிர்வாகிகள் உடன் அளித்துள்ளார்.



மகளிர் தின விழாவில் மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றியம் மந்திச்சுவை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு மணிமேகலை விருது மற்றும் முத்தாலம் பாறை ஊராட்சி மாரியம்மாள்சுயஉதவிகுழுவிற்கானமணிமேகலைவிருதுவழங்கப்பட்டதுஇந்தநிகழ்ச்சி மகளிர் திட்ட இயக்குனர் சந்திரா மற்றும் உதவி திட்ட அலுவலர் டென்னிஸ் ராஜ் திரு செந்தில்குமார் உதவி திட்ட அலுவலர் தங்க கொடி வட்டார மேலாளர் ரெஜினா வட்டார ஒருங்கிணைப்பாளர் ஆகியோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது

### கர்நாடகா மாநில கொலை வழக்கில் போச்சம்பள்ளி நீதிமன்றத்தில் ஆஜராக வந்த

# 9 கொலைக் குற்றவாளிகள் வாகன தணிக்கையில் போலீசாரை கண்டதும் தப்பியோட்டம்

## விரட்டி பிடித்து கர்நாடகா போலீசிடம் ஒப்படைத்த போச்சம்பள்ளி போலீசார்



கிருஷ்ணகிரி மாவட்டம்,போச்சம்பள்ளி நீதிமன்றத்தில் சரண்டராக வந்த9கொலைகுற்றவாளிகள் போச்சம்பள்ளி போலீசார் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருப்பதை கண்டு வேனில் இருந்து தப்பியோடினர். அவர்களை விரட்டி பிடித்த போலீசார்,அவர்களிடம்தீவிரமாக விசாரித்தபோது, கர்நாடகா மாநிலம், ஆனேக்கல் ஆடிட்டர் கொலை வழக்கில், கர்நாடகா போலீசாரால் தேடப்பட்டுவந்தகொலை குற்றவாளிகள், வேனில் தருமபுரியிலிருந்து போச்சம்பள்ளி கோர்ட்டில் சரண்டர் ஆக வந்துள்ளனர்.

அப்போது போச்சம்பள்ளி போலீசார் வாகன தணிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்ததை கண்ட 4 குற்றவாளிகள் வேனில் இருந்து இறங்கி ஓடினர். இதனையடுத்து ஓடிய குற்றவாளிகளை விரட்டி பிடித்து, பின்னர் கர்நாடாக தனிப்படை இன்ஸ்பெக்டர்கள் அர்சவர்தன் மற்றும் சுந்தர் ஆகியோரிடம் 9 குற்றவாளிகளை யும் ஒப்படைத்தனர். குற்றவாளிகள் தப்பியோடியதை போச்சம்பள்ளி போலீசார் விரட்டி பிடித்த சம்பவம் சினிமா காட்சி போல் அறங்கேறியதால் இப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

# சுரண்டையில் இருந்து மதுரைக்கு காலை 6:30 மணிக்கு அரசு பஸ் இயக்கம்; பயணிகள் வரவேற்பு

சுரண்டை மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள பொதுமக்கள் வியாபாரி கள் மற்றும் விவசாயிகள் மதுரைக்கு சென்று வர காலை நேரத்தில் நேரடி பஸ் வசதி இல்லை ஆகவே காலை நேர பஸ் மற்றும் மதுரையில் இருந்து இரவு நேர பஸ் இயக்க வேண்டும் என நீண்ட நாட்களாக கோரிக்கை விடுத்து வந்தனர். இந்நிலையில் இதனை நிறைவேற்ற வேண்டும் என தென்காசி எம்எல்ஏ எஸ்பழனி நாடார், தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் ஜெயபாலன் ஆகியோர் போக்குவரத்து துறைஅமைச்சரை வலியுறுத்தி வந்தனர்



சுரண்டையில் இருந்து தினமும் காலை 6-45 மணிக்கு புறப்பட்டு 11 மணிக்கு மதுரை சென்றடையும் வகையிலும் பகல் 11-45 மணிக்கு சுரண்டையில் இருந்து புறப்பட்டு 4-10மணிக்கு மதுரைக்கும் மதுரையில் இருந்து பகல் 11-35 மணிக்கு புறப்பட்டு மாலை 4-00 மணிக்கு சுரண்டைக்கும் மதுரையில் இருந்து மாலை 4-35 மணிக்கு புறப்பட்டு இரவு 9-05 மணிக்கு சுரண்டைக்கு வரும் வகையில் செங்கோட்டை மற்றும் புளியங்குடி அரசு பஸ் டெப்போ பஸ்கள் இயக்கப்படுகிறது இதனையடுத்து காலை 6-45 மணிக்கு அரசு பஸ் இயக்கப்படுவதால் பொதுமக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர் இருப்பினும் இப் புளியங்குடி டெப்போவில் இருந்து இயக்கபடும்பஸ் பழைய ஊதா வண்ண பஸ்ஸாக இயக்கப்படுகிறது அதனைமாற்றி நவீன பிஎஸ்6 பஸ்ஸாக இயக்க வேண்டும் என கோரிக்கை விடுத்து ள்ளனர்.



# தென்காசி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு முதன்மை மாவட்ட நீதிபதி ராஜவேலு தொடங்கி வைத்தார்

தென்காசியில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுசெயல்பாடுகளை முதன்மை மாவட்ட நீதிபதி பி.ராஜவேலு தொடங்கி வைத்தார்.

சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு உத்தரவின் பேரில் தென்காசி மாவட்ட மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இதன் தொடக்க விழாவிற்குமுதன்மைமாவட்ட நீதிபதியும், மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு தலைவருமான பி.ராஜவேலு தலைமை தாங்கி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு செயல்பாடுகளை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சிக்கு கூடுதல் மாவட்ட நீதிபதி மனோஜ் குமார், முதன்மை சார்பு நீதிபதி பிஸ்மிதா, கூடுதல் சார்பு நீதிபதி முருகவேல்,முதன்மைமாவட்ட உரிமையியல் நீதிபதி ராஜேஷ்குமார், குற்றவியல் நீதித்துறை நடுவர் மன்ற நீதிபதி முத்துலட்சுமி, சிவகிரி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதியும் குற்றவியல் நீதித்துறை நடுவர் மன்ற நீதிபதியுமான ஜெனிபர் ஜோசப், கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி காளீஸ்வரி, சங்கரன்கோவில் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி பவித்ரா, ஆலங்குளம் மாவட்ட உரிமையியல் நீதிபதி முத்துசெல்வம் ஆகியோர் முன்னிலைவகித்தனர். முன்தாக, முதன்மை மாவட்ட நீதிபதியும், மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு தலைவருமான பி.ராஜவேலு நிருபர்களிடம் கூறியதாவது:

இதுவரை திருநெல்வேலி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுதலைமையில் தென்காசி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு செயல்பட்டு வந்தது. தற்போது தென்காசி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவிற்கு சென்னை உயர்நீதிமன்றம், மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. இதனை அடுத்து தென்காசி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. உலக மகளிர் தினத்தை முன்னிட்டு தென்காசி மாவட்ட சட்டப்பணிகள் குழு பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. இனி தென்காசி மாவட்ட பொதுமக்கள் திருநெல்வேலி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவை நாட வேண்டியதில்லை. அவர்கள் தென்காசி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவை நாடினால்போதுமானது. மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவிற்கு தனியாக செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் கூடுதல் சார்பு நீதிபதி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மேலாளராகசெயல்படுவார். சட்டம் சார்ந்த மற்றும் சட்டம் சாராத பிரச்சனைகளுக்கு பொதுமக்கள் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவிடம் மனுக்கள் வழங்கலாம். ஒவ்வொரு மாதமும் மாவட்ட சட்டப்பணிகள் குழு ஆலோசனைக் கூட்டம் நடைபெறும். மூன்று மாதங்களுக்கு ஒருமுறைசிறப்பு ஆய்வுக் கூட்டம் நடைபெறும். இக்கூட்டங்களில்ல் மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட காவல்துறை கண்காணிப்பளார் மற்றும் அனைத்து அரசு துறை அலுவலர்கள் கலந்து கொள்வார்கள்.

தென்காசி மாவட்டத்தில் ஆலங்குளம், செங்கோட்டை,சிவகிரி,சங்கரன்கோவில் ஆகிய 4 புறநகர்களிலும் வட்ட அளவில் சட்டப்பணிகள் ஆணைக்குழு செயல்படும், தென்காசி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில்; மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு தலைமை அலுவலகம் அமைக்கப்பட்டு உள்ளது.

நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வதற்கு முன்பே மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவில் மனுக்களை வழங்கி பரிகாரம் காணலாம். முக்கிய பிரச்சினைகள் குறித்து நீதிமன்றம் மூலம் பரிகாரம் பெறப்படும். இழப்பீடு உள்ளிட்ட கோரிக்கைகள் குறித்து இங்கு மனு அளித்து பரிகாரம் பெறலாம். மேலும் சட்டம் சாராத பட்டா உள்ளிட்ட பிரச்சனைகளுக்கும் இங்கு மனுக்கள் அளிக்கலாம். அம்மனுக்கள் சம்பந்தப்பட்ட அரசு துறை அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தென்காசி மாவட்ட பொதுமக்கள் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவில் மனுக்கள் அளித்து பயன்பெறலாம் என கூறினார்.

# வாழ்க சத்தியம் ஜெயிப்பது நிச்சயம் வாழ்க தமிழ்



ஓம் ஸ்ரீ மகாலட்சுமி குருவே நமக,

ஓம் ஸ்ரீ மகாலட்சுமி தாயே நமக

ஆதிமூல சற்குரு வீரபோகவசந்தராயர் கல்கி மகான் ஸ்ரீ மகாலட்சுமி சுவாமிகள்

பக்த கோடி பெருமக்கள் அனைவருக்கும் ஆசிர்வாதம்.

காலம் என்ற ஒரு கடவுள் ஒரு மனிதனுக்குள் ஒளிந்து ஒளிவிட்டுக் கொண்டிருக்கிறது. புரியவில்லை என்று சொன்னால் காலம் என்ன செய்யும். கடவுள் என்ன செய்வார். மனிதன் உணர்ந்து கொள்ள வேண்டும். இதுதான் உண்மை.

இயற்கையை மிரட்டி வாழ்க்கையை ஓட்டலாம் என்று நினைக்கிறார்கள். ஒரு போதும் நடக்காது.

வளையை போட்டு மீன் பிடிக்க நினைப்பவன் அவன் தொழில் தூண்டிலை போட்டு மீன் பிடித்து அவன் உண்பதற்காக நினைப்பது தவறு இல்லை.

மற்றவர்களுக்கு உதவி செய்ய சில தவறுகளை செய்யலாம். அதுவும் கூடாது. இருந்தாலும் இறைவனுக்கு தெரியும். யார் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை காலம் கணக்கு போட்டு வைத்திருக்கிறது.

சரியான நேரம் வரும்போது அவர்களுக்கு உணர்த்துவார். எது சரி எது தவறு என்று புரிய வைப்பார்.

அது தான் இயற்கை. அவர் தான் கடவுள்.

உனக்குள் நான் இருக்கின்றேன். எனக்குள் நீ இருக்கின்றாய். அவர்தான் ஆத்மா பரமாத்மா. பரம்பொருள் என்பது ஒன்றே. ஜீவன் ஆத்மா என்பது பல்லாயிரம் கோடி.

பூமியைபடைத்தார்இறைவன்.வேலியைபோட்டான் மனிதன். உயிரைப் படைத்தான் இறைவன். ஜாதியை பிரித்தான் மனிதன்.

தன் உயிரை காப்பாற்றுவதற்காக எதை வேண்டுமென்றாலும் உண்ணலாம். உயிரை உடலை வளர்க்கலாம் என்று நினைப்பது தவறு.

நாவு சுவைக்கு என்றாவது ஒரு நாள் நாம் உண்ணலாம்.சிலதைஉண்ணலாம்.அதேவேலையாக நீ இருந்தால் மனிதன் அல்ல மிருகத்துக்கு சமம்.

காமம் என்பது இயற்கை. தாம்பத்தியம் வைத்துக் கொண்டுசந்தோஷமாகவாழலாம்.அதேவேலையாக நீ இருந்தாய் என்று சொன்னால் நீ மனிதனா என்ன. மிருகம் என்பது ஒரு வகைப்படுத்துகிறது.

# விபத்தில் முதியவர் பலி:



கன்னியாகுமரி மாவட்டம் இரணியல் அருகே குருந்தன்கோடு அடுத்த காரோடு பகுதியை சேர்ந்தவர் பிரான்சீஸ் (71). நேற்று முன்தினம் மாலை சென்னையில் இருந்து ஊருக்கு வந்த மகளை அழைத்துசெல்லஅம்மன் கோயில் பேருந்து நிறுத்தம் வந்தார். சாலையின் எதிர்ப்புறம் மகள் நிற்பது கண்டு சாலையை கடக்க முயன்றதாக தெரிகிறது. அப்போது எதிர்பாராத விதமாக அந்த வழியாக வந்த பைக் பிரான்சீஸ் மீது வேகமாக மோதியது.படுகாயம்அடைந்தஅவர்ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வந்தார்.ஆனால்சிகிச்சைபலனின்றி பரிதாபமாக இறந்தார்.

## திருச்சியில் பிரதமர் மோடி பங்கேற்கும் என்.டி.ஏ. மாநாடு:

# கடலூரில் அன்புமணி ராமதாஸுக்கு உற்சாக வரவேற்பு

## சட்டம் ஒழுங்கு சீர்கேடு குறித்து தமிழக அரசு மீது கடும் விமர்சனம்



திருச்சியில் நடைபெறும் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் (என்.டி.ஏ) பிரம்மாண்ட மாநாட்டில் பங்கேற்பதற்காக திருச்சி சென்ற பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் அவர்களுக்கு, வேப்பூரில் கடலூர் மேற்கு மாவட்டம் சார்பில் மாவட்ட செயலாளர் ஜெ.கார்த்திகேயன் தலைமையில் சிறப்பான முறையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த வரவேற்பை ஏற்றுக்கொண்ட பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அன்புமணி ராமதாஸ், தமிழக அரசின் செயல்பாடுகளையும், மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு நிலையையும் கடுமையாகவிமர்சித்துப் பேசினார்.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு முற்றிலுமாக சீர்கெட்டுள்ளதாகவும், மாநிலம் முழுவதும் தினமும் கொலைகள் அரங்கேறி வருவதாகவும் அவர் குற்றம் சாட்டினார். மாநிலத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 44,000 ஆகவும், போக்சோ (POCSO) வழக்குகள் 27,000 ஆகவும் அதிகரித்துள்ளதற்கு, தமிழகத்தில் செயல்படும் 4,700 டாஸ்மாக்கடைகள்,1,500மனமகிழ் மன்றங்கள் மற்றும் 20,000-க்கும் மேற்பட்ட சட்டவிரோத சந்து கடைகளுமே முக்கியக் காரணம் என்று அவர் தெரிவித்தார்.

மேலும்,கஞ்சா,கொக்கைன், ஹெராயின், எல்.எஸ்.டி போன்ற கொடிய செயற்கை போதைப்பொருட்கள் நகரங்கள் மட்டுமின்றி கிராமங்கள் வரையிலும் தடையின்றி கிடைப்பதாகவும், ஆனால் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இதனைத் தடுத்து நிறுத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல், வெறும் விளம்பரப் படங்களில் மட்டுமே கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் சாடினார்.

தொடர்ந்து பேசிய அவர், ஆசிரியர்கள், மருத்துவர்கள், அரசு மற்றும் சத்துணவு ஊழியர்கள் என அனைத்துத் தரப்பினரும் தங்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி வீதியில் இறங்கிப் போராடும் அவல நிலை உள்ளதாகக் குறிப்பிட்டார். இந்தியாவிலேயே அதிக கடன் வாங்கும் மற்றும் அதிக வட்டி கட்டும் மாநிலமாகத் தமிழகம் மாறியுள்ளதாகத்தெரிவித்தஅவர், இவ்வளவு கடன் வாங்கியும் உள்கட்டமைப்பு மிகவும் மோசமாக உள்ளதைச் சுட்டிக்காட்டினார். குறிப்பாக, சென்னை ஐ.ஐ.டி எதிரே மத்திய கைலாஷ் பகுதியில் கட்டப்பட்ட மேம்பாலம் திறக்கப்பட்ட இரண்டு நாட்களிலேயே 100-க்கும் மேற்பட்ட இடங்களில் பள்ளங்கள் ஏற்பட்டதாகவும், கான்கிரீட் பாலத்தில் ஏற்பட்ட பள்ளங்களை மறைக்க அதன் மீது தார் ஊற்றி மூடும் திறமையற்ற நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார். தரமற்ற முறையில் பாலம் கட்ட அனுமதி அளித்தவர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் மீது உடனடியாக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்எனவும்அவர் வலியுறுத்தினார்.

ஆட்சிக்கு வந்தால் கேஸ் சிலிண்டருக்கு 100 ரூபாய் மானியம் வழங்குவோம் என்று தேர்தல் வாக்குறுதி அளித்த தி.மு.க., இதுவரை அதனை நிறைவேற்றாதது ஏன் என கேள்வி எழுப்பிய அன்புமணி ராமதாஸ், சர்வதேசப் போர்ச் சூழலால் வணிகப் பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலை ஏற்ற இறக்கங்களைச் சந்தித்தாலும், வீட்டு உபயோக சிலிண்டர் விநியோகத்தை மத்திய அரசு சீராக வழங்கி வருவதாகக் குறிப்பிட்டார்.

வரவிருக்கும் தேர்தலில் அ.தி.மு.க தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி குறைந்தது 200 தொகுதிகளில் மிகப்பெரியவெற்றியைப் பெறுவது உறுதி என்றும், அதை மக்கள் முடிவு செய்துவிட்டார்கள் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். இறுதியாக,மூளைச்சாவு அடைந்தவர்களுக்கான 'கருணைக்கொலை' தொடர்பாக உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு குறித்தகேள்விக்கு பதிலளித்த அவர், இந்தியாவில் முதல்முறையாக மனிதநேய அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள இந்தத் தீர்ப்பின் முழு நகலையும் படித்துப் பார்த்த பின்னரே இது குறித்து விரிவான கருத்தைத் தெரிவிக்க முடியும் என்றார்.



தென்காசி மாவட்டம் இலஞ்சியில் உள்ள டிடிடிஏ டிஎஸ் டேனியல் ராஜம்மாள் கல்வியியல் கல்லூரியில் மகளிர் தின விழாவை முன்னிட்டு, பரிசளிப்பு விழா, இந்திய பல் மருத்துவ சங்கம் தென்காசி கிளை சார்பில் பல் மருத்துவ முகாம் ஆகியவை நடைபெற்றன. நிகழ்ச்சிக்கு கல்லூரி தாளாளர் ராஜகுமார் தலைமை வகித்தார் முதல்வர் (பொ) ஷீலாநவரோஸ் முன்னிலை வகித்தார் உடற்கல்வி பேராசிரியர் ஐசக் ஜான்சன் வரவேற்றார் மாணவ ஆசிரியர்கள் கலை நிகழ்ச்சிகள் நடந்தன. பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன தொடர்ந்து இந்திய பல் மருத்துவர் சங்கம் சார்பில் இலவச பல் சிகிச்சை முகாம் மற்றும் விழிப்புணர்வு கருத்தரங்கம் நடந்தது இதில் பல் மருத்துவ சங்கம் தலைவர் கலந்தர் மஸ்தான், செயலாளர் செய்யது முகமது தமீம், பல் ஆரோக்கியத்திற்கான குழு அமைப்பாளர் ஷிஃப்னாஷ் ரஃப்னா, பொருளாளர் நசிருதீன், சுரேஷ், லதா, ரதியா, வீனாராம் பட்டேல், மகாலட்சுமி, வசந்த், ஸ்டான்லி புஷ்பராஜ். ஆகியோர் கொண்ட குழுவினர் சிகிச்சை அளித்தனர் உதவி பேராசிரியர் ஜரீன் தொகுத்து வழங்கினார் உதவி பேராசிரியர் ஜெனிபர், ஜெபா எபனேசர், நூலகர் ஏஞ்சலின், அலுவலக பணியாளர்கள் பிரெட்ரிக், ஷேரோன், பேதுரு, லட்சுமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் முடிவில் உதவி பேராசிரியர் லீதியாள் சொர்ண ஜெயா நன்றி கூறினார்





நாகர்கோவில் இந்து கல்லூரி நாட்டு நலப்பணி மாணவர்கள் வாக்காளர் விழிப்புணர்வு பேரணி கொட்டாரத்தில் நடைபெற்றது. இதில் கலப்பை மக்கள் இயக்க தலைவர் தென்குமரி கல்வி கழகச் செயலாளர் பி.டி.செல்வகுமார் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். இதில், இந்து கல்லூரி பேராசிரியர்கள் முனைவர் மலர், முனைவர் மகேஷ், கொட்டாரம் அரசுப்பள்ளி ஓய்வு பெற்ற ஓவிய ஆசிரியர் வை.கோபால் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இப்பேரணியின் போது வாக்களிப்பது நமது உரிமை நமது கடமை எனவும், வாக்களிப்போம் ஜனநாயகம் காப்போம் எனவும் மாணவ, மாணவிகள் கோஷமிட்டனர்.

## அச்சிறுப்பாக்கம் அருகே எல்.எண்டத்தூர் ஊராட்சியில் 115 குடும்பங்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா

### ஒன்றிய செயலாளர் ஜி.தம்பு வழங்கினார்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அடுத்த அச்சிறுப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம் எல்.எண்டத்தூர் கிராமத்தில் சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாக ஆதிதிராவிடர் நலத்துறை மூலமாக வழங்கப்படாமல் இருந்த இலவச வீட்டு மனை பட்டா 115 குடும்பங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் காஞ்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்எல்ஏ, காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம் அவர்களின் பெரும் முயற்சியால் முதலமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்டு இன்று அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஜி. தம்பு அவர்களின் தலைமையில் செயற்குழு உறுப்பினர்

டி. ஆர். நாராயணன் முன்னிலையில் ஊராட்சி மன்ற தலைவர் யமுனா ஊராட்சி மன்ற துணைத் தலைவர்

T.N. ராஜலட்சுமி கழக நிர்வாகிகள் மஞ்சுநாதன், பரமசிவம், ஜானகிராமன் ஆகியோர் பொதுமக்களுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்களை வழங்கினர்.

இந்த நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்



புரட்சித் தலைவி அம்மாவின் 78வது பிறந்தநாள் முன்னிட்டு வெற்றிகரமாக நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டி, நலத்திட்டம் உதவிகள் குறித்து நமது கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடியாரை சந்தித்த தூத்துக்குடி முன்னாள் எம்பி ஜெய்சிங் தியாகராஜ் நட்டார்ஜி, மகன் ஜெ.ஜோசப் சாமுவேல் நட்டார்ஜி. எம்ஜிஆர் இளைஞர் அணி சேலம் நெடுஞ்சாலை நகரில் உள்ள முன்னாள் முதல்வரின் இல்லத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.



## திருவைகுண்டம் தொகுதியில் போட்டியிட திமுக ஐடி விங் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் விருப்பமனு

தமிழகத்தில் நடைபெற உள்ள 2026 சட்டமன்ற தேர்தலில் ஆளும் கட்சியான திராவிட முன்னேற்ற கழகம் சார்பில் பல்லாயிரக்கணக்கான திமுக நிர்வாகிகள் போட்டியிட விருப்பம் தெரிவித்து திமுக தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில் விருப்ப மனுவை தாக்கல் செய்துள்ளனர். இதில் திமுகவின் முக்கிய அணியான இளைஞரணி நிர்வாகிகள் ஏராளமானோர் விருப்பமனு தாக்கல் செய்த நிலையில், திமுக தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களும் தேர்தலில் போட்டியிட வேண்டி விருப்பமனு அளித்துள்ளனர்.

இந்நிலையில் தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் சட்டமன்ற தொகுதியில் தூத்துக்குடி தெற்கு மாவட்ட திமுக தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் பேரின்பராஜ் லாசரஸ், போட்டியிட வேண்டி

தோழப்பன்பண்ணை முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் காசிராஜன் மகன் அயலக அணி (சுவீடன்) பாலசுப்பிரமணியன் காசிராஜன் ஏற்பாட்டில், தூத்துக்குடி தெற்கு மாவட்ட திமுக விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் மாரியப்பன் மகேஷ் அண்ணா அறிவாலயத்தில் விருப்ப மனு அளித்துள்ளனர்.

## மண்டைக்காடு பகவதி அம்மன் கோவில் திருவிழா பாதுகாப்பு பணி



கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர். ஸ்டாலின் நேரடி மேற்பார்வையில் நடந்த மண்டைக்காடு பகவதி அம்மன் கோவில் திருவிழா பாதுகாப்பு பணி சிறிய அசம்பாவிதங்கள் ஏதுமின்றி சிறப்பான முறையில் நடந்து முடிந்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் மண்டைக்காடு பகவதி அம்மன் திருவிழாவானது 01.03.2026 ம் கொடியேறி நடைபெற்று வந்தது.

மேலும் பாதுகாப்பு பணிக்காக மாவட்ட காவல்துறை சார்பாக

கண்காணிப்பு கோபுரங்கள் மூன்றடுக்கு கடற்கரை பாதுகாப்பு முதலுதவி ஏற்பாடுகள் பக்தர்களுக்கு வழிகாட்ட பேனர்கள் அமைப்பு பாதுகாப்பு எண்கள்

டிரம்பில் வைக்கப்பட்ட கடல்நீர் தற்காலிக பேருந்து நிறுத்தம் செய்யும் இடங்கள்

பார்க்கிங் வசதிகள் காவல் கட்டுப்பாட்டு அறை பல்வேறு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டது. இந்நிலையில் மண்டைக்காடு திருவிழா கூட்டநெரிசலில் காணாமல் போன குழந்தை மற்றும் பொதுமக்கள் தவறவிட்ட செல்போன்கள், மணிபர்ஸ் ஆகியவற்றை போலீசார் மீட்டு உரியவர்களிடம் ஒப்படைத்தார்கள்.

மேலும் பக்தர்கள் எந்த இடையூறு இன்றி தரிசனம் செய்யும் வகையில் போக்குவரத்து வசதிகள் மற்றும் பார்க்கிங் வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

சிறப்பாக செயல்பட்டு பொதுமக்களில் பாதுகாப்பை உறுதி செய்த காவல் அதிகாரிகள் மற்றும் போலீசாரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பாராட்டினார்கள்.

## தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி விவசாய பிரிவு மாநில பொது செயலாளர் ஆர்.எஸ்.ராஜன் வெளியிட்டுள்ள அறிக்கை!



சிவகங்கை பாராளுமன்ற உறுப்பினர் கார்த்தி ப சிதம்பரத்தின் சிவகங்கை தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் மர்ம நபர்கள் பெட்ரோல் குண்டு வீசி உள்ளனர்.

இந்த சம்பவம், சிவகங்கை பாராளுமன்ற தொகுதி மக்களை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது. தமிழக காங்கிரஸ் தொண்டர்களை கவலை அடைய வைத்துள்ளது. நல்ல வேளையாக அந்த நேரத்தில் அங்கு யாரும் இல்லை. இதனால் பெரிய ஆபத்து தவிர்க்கப்பட்டுள்ளது. இந்த சதி சிவகங்கை பாராளுமன்ற உறுப்பினர் கார்த்தி ப சிதம்பரத்தை

குறிவைத்து தாக்குதல் நடந்துள்ளது என்று தெரிகிறது. இந்தியாவில் பொருளாதாரத்தை உயர்த்திய தலை சிறந்த தலைவர்களில்

முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங், முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் ஆகியோரின் பங்கு மகத்தானது. இவர்கள் வழியில் இன்று இளைஞர்கள் மற்றும் பொது மக்கள் மத்தியில் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கி இந்தியாவின் எதிர்கால பிரதமர் ராகுல் காந்தியின் நம்பிக்கையாக பாராளுமன்றத்தில் தமிழகத்தின் குரலாக ஒலிக்கும்

கார்த்தி ப சிதம்பரத்தின் செயல்பாடுகள் அனைவரையும் பாராட்ட வைத்து வருகிறது. அனைத்து மக்கள் பிரச்சனைகளிலும் தைரியமாக கருத்துக்களை தெரிவிப்பதோடு மட்டுமல்லாமல் களத்திலும் இறங்கி செயல்பட்டு வரும் கார்த்தி ப சிதம்பரத்தின் கருத்துக்கள் பொது மக்கள் மத்தியில் எளிச்சி ஏற்படுத்துகிறது என்பதால் காங்கிரஸின் வளர்ச்சியையும் கார்த்தி ப சிதம்பரத்தின் வளர்ச்சியையும் தடுக்கும் நோக்கில் மர்ம நபர்கள் செய்த இந்த செயல் கடும் கண்டனத்திற்கு உரியது. எனவே கார்த்தி ப சிதம்பரத்திற்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் மத்திய அரசு உடனடியாக இசட் பிரிவு பாதுகாப்பை வழங்கி தகுந்த பாதுகாப்பு அளிக்க வேண்டும் என தமிழக காங்கிரஸ் விவசாய பிரிவு சார்பில் கேட்டுக் கொண்டார்.

## தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில்

### நூலக புத்தகம் வாசித்த மாணவர்களுக்கு பரிசு வழங்கும் விழா




தேவகோட்டை – சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் நூலக புத்தகங்கள் வசித்து மிக சிறப்பாகப் பின்னூட்டம் வழங்கிய மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா நடைபெற்றது.

ஆசிரியர் ஸ்ரீதர் வரவேற்றார். தலைமை ஆசிரியர் லெ .சொக்கலிங்கம் தலைமை தாங்கினார். தேவகோட்டை குன்றக்குடி தைப்பூச காவடி நகரத்தார் ஸ்ரீ சண்முகநாதன் அன்னதான அறக்கட்டளை நிர்வாகி சிதம்பரம் மற்றும் காளையப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர் . அறக்கட்டளை நிர்வாகி அய்யப்பன் பேசுகையில், தானத்தில் சிறந்தது அன்னதானம் என்பார்கள் .காலை உணவு திட்டம், மதிய உணவு திட்டம் எல்லாம் பள்ளிகளில் செயல்படுத்தப்படுகிறது. பசி இல்லாமல் ருந்தால்தான் நம்மால் எதுவும் செய்ய முடியும். நன்றாக படிக்க முடியும். அதனால்தான் இந்த மாதிரியான திட்டங்களை வகுத்துள்ளார்கள்.

படிப்பு தான் நம்முடைய கடமை. படிப்பில் தான் நாம் அதிகம் கவனம் செலுத்த வேண்டும். நாம் பள்ளி முடிந்து வீட்டிற்கு சென்றவுடன் நாம் மொபைல் டிவி பார்ப்பதால் நம்முடைய கவனம் சிதறும். நாம் அதையெல்லாம் தவிர்த்து படிப்பில் கவனம் செலுத்தவேண்டும். பள்ளிக்கு வந்தவுடன் 8 மணி நேரம் இங்கு தான் இருக்கிறோம். அதனால் ஆசிரியர்கள் சொல்வதை கேட்டு நடந்து கொண்டால் நமக்கு மிகப்பெரிய வெற்றி கிடைக்கும். ஆசிரியர்கள் சொல்வதை என்றும் மறக்கக்கூடாது. நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். மரங்கள் நமக்கு நிறைய நன்மைகளை தருகிறது. மரங்கள் நிழல் கொடுக்கிறது. காய்கனிகளை கொடுக்கிறது. மரத்திற்கு தண்ணீர் ஊற்றி வளர்ப்பவர்ளுக்கு மட்டும் பலன் கொடுப்பது இல்லை. எல்லா மனிதர்களுக்குமே நன்மை செய்கிறது. இயற்கை சூழலுக்கு மரங்கள் மிக மிக முக்கியம். மரங்கள் இல்லை என்றால் மனிதர்கள் வாழ முடியாது. முடிந்தவரை நாம் மரங்களை வளர்த்து பாதுகாக்க வேண்டும். பேனாவின் பயன் எழுதவேண்டும். எழுதாமல் அழகுக்கு வைத்துக்கொள்வதில் பயனில்லை. நாம் நன்றாகப் படித்து நல்ல வேலைக்கு சென்று நம் குடும்பத்தையும் முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல வேண்டும். என்று பேசினார். நூலக புத்தகங்கள் வாசித்து சிறப்பாக எடுத்துக்கூறிய மாணவர்கள் நந்தனா, ஜெயகாந்தன் ,ஸ்டெபி ,ஜாய் லின்சிகா, சபரிவர்ஷன், யோகின் ஆகியோருக்கு பரிசாக புத்தகங்கள் வழங்கப்பட்டது . நிறைவாக ஆசிரியை முத்துலெட்சுமி நன்றி கூறினார்.



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி நேற்று (11.03.2026) ஈரோடு, என்.ஜி.ஜி.ஓ நகர், மூலப்பாளையம், விநாயகர் கோவில் வீதி பகுதியில் புதிய முழுநேர நியாய விலை கடையினை திறந்து வைத்து, குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்கினார். உடன் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் கந்தராஜா உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி நேற்று (11.03.2026) ஈரோடு மாவட்டம், கருவேலம்பாளையம், கொளாநல்லி குட்டப்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், கருவேலம்பாளையத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக்கடையினை திறந்து வைத்து, குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்கினார்.உடன் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் கந்தராஜா உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி நேற்று (11.03.2026) ஈரோடு, லக்காபுரம் புதூர், சுப்பராயவலசு பகுதியில் புதிய முழுநேர நியாய விலைக்கடையினை திறந்து வைத்தார். உடன் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார், கூட்டுறவுசங்கங்களின்இணைப்பதிவாளர்கந்தராஜாஉட்பட பலர் உள்ளனர்.





தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமிநேற்று(11.03.2026)ஈரோடுமாவட்டம்,பள்ளியூத்துதொடக்கவேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், புதிய கூட்டுறவு அலுவலக கட்டிடத்தினை திறந்து வைத்து, பேசினார். உடன் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ப. கந்தராஜா உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு வி.வி.சி.ஆர் முருகேசனார் செங்குந்தர் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் நேற்று (11.03.2026) நடைபெற்ற 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வு மையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் முதன்மைக் கல்வி அலுவலர் முனைவர். மான்விழி உள்ளார்.

# அய்யனடைப்பு கிராமத்தில் புதிய ரேஷன் கடைக்கு, எம்.சி.சண்முகையா எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினார்



*தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம், ஒட்டபிடாரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அய்யனடைப்பு கிராமத்தில் ரூ.15.50 லட்சம் மதிப்பீட்டில் புதிய ரேஷன் கடை கட்டுவதற்கான பணிகளை ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா நேற்று அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.*

*தொடர்ந்து, சேதமடைந்து கிடக்கும் அய்யனடைப்பு ஊராட்சி மன்ற அலுவலகத்தை பார்வையிட்ட எம்.சி.சண்முகையா எம்எல்ஏ. பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று, அக்கட்டிடத்தை மக்கள் பயன்பெறும் வகையில் புதிய திட்டங்களின்படி, கட்டி தருவதாக உறுதி கூறினார். முன்னதாக, எம்எல்ஏவுக்கு இளைஞரணி, ஊர் மக்கள் சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.*

*இந்நிகழ்ச்சியில், தூத்துக்குடி ஊராட்சி ஒன்றிய உதவி பொறியாளர் ரவி, வருவாய் ஆய்வாளர் மேகலா, தூத்துக்குடி மத்திய ஒன்றிய திமுக துணை செயலாளர் ஹரி பாலகிருஷ்ணன், இலக்கிய பகுத்தறிவு பேரவை தலைவர் ச.த.பொன்னரசு உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.*



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி நேற்று (11.03.2026) ஈரோடு மாவட்டம், கொடுமுடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் மகளிர் சுய உதவிக்குழுவினர்களுக்கு கடனுதவியினை வழங்கினார். உடன் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார்,கூட்டுறவுசங்கங்களின்இணைப்பதிவாளர்ப.கந்தராஜா,துணைப்பதிவாளர்/ முதன்மை வருவாய் அலுவலர் பெ.பிரகாஷ் உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி நேற்று (11.03.2026) ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி நகர கூட்டுறவு கடன் சங்கம், ஈஞ்சம்பள்ளி கிளை கூட்டுறவு அலுவலக கட்டிடத்தினை திறந்து வைத்தார். உடன் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் கந்தராஜா உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு. முத்துசாமி நேற்று (11.03.2026) ஈரோடு மாவட்டம், பெருந்துறை சாலை, வெள்ளோடு பகுதியில் நியாய விலைக் கடையுடன் கூடிய புதிய கூட்டுறவு சந்தையினை திறந்து வைத்து,பார்வையிட்டார்.உடன்ஈரோடுகிழக்குசட்டமன்றஉறுப்பினர்வி.சி.சந்திரகுமார், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ப.கந்தராஜா ஆகியோர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம், வீரப்பன்சத்திரம், மாணிக்கம்பாளையம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் (11.03.2026) நடைபெற்ற 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வு மையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ஆய்வு மேற்கொண்டதைத் தொடர்ந்து, நசியனூர்சாலை, நல்லித்தோட்டம், மாணிக்கம்பாளையம் பகுதியைச் சேர்ந்த சி.இ.டி. மெட்ரிக்குலேஷன் பள்ளியில் 10 ஆம் வகுப்பு பயிலும் மாணவி எஸ்.என்.கிருத்திகா அவர்கள் தேர்வுக்கு தயாராகி வரும் போது எதிர்பாராதவிதமாக வீட்டின் கதவில் வலது கையின் நடுவிரல் நசுக்கியதால் உடனடியாக குடும்ப உறுப்பினர்கள் மூலம் மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லப்பட்டு, உரிய மருத்துவ சிகிச்சை அளித்து, உரிய மருத்துவ சான்றிதழ் வழங்கி மாணவியை உடனடியாக சொல்வதை எழுதுபவர் உதவியுடன் தேர்வு எழுத ஏற்பாடு செய்யப்பட்ட மாணவியுடன் கலந்துரையாடிய போது எடுத்த புகைப்படம். இந்நிகழ்ச்சியின் போது முதன்மைக் கல்வி அலுவலர் முனைவர். மான்விழி உடனிருந்தார்.



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி நேற்று (11.03.2026) ஈரோடு மாவட்டம், பள்ளியூத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், புதிய கூட்டுறவு அலுவலக கட்டிடத்தினை திறந்து வைத்தார். உடன் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ப.கந்தராஜா உட்பட பலர் உள்ளனர்.

# ஈரோடு மாவட்ட அகில இந்திய விஸ்வகர்ம பேரவை மற்றும் கே.வி. ஐ.சி இணைந்து நடத்திய

# தையல் பயிற்சி மற்றும் ரூ.45000 மதிப்பிலான தையல் இயந்திரம் வழங்குதல் நிறைவு நாள் விழா



*ஈரோடு மாவட்ட அகில இந்திய விஸ்வகர்ம பேரவையும்கே.வி.ஐ.சி இணைந்து நடத்திய கதர் கிராமப்புற தொழில் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 20 மகளிர்களுக்கு 15 நாட்கள்தையில் தொழில் பயிற்சி பிப்ரவரி 23ஆம் தேதி தொடங்கி நடைபெற்றது.அதன் நிறைவு நாள் விழாவில் கதர் கிராமப்புற திட்டத்தின் கே.வி.ஐ.சி அதிகாரி சுஷாந்த் வருகை தந்து 20 பேர் தாங்கள் தயார் செய்த தையில் பொருட்களை ஆய்வு செய்தார். அதன் பிறகு திட்டத்தின் விளக்கங்களையும் எடுத்துக் கூறி பெண்களுக்கு ரூபாய் 45 ஆயிரம் மதிப்பிலான தையல் இயந்திரங்கள் ,சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தார். இவ்விழாவிற்கான ஏற்பாட்டை அகில இந்திய விஸ்வகர்மபேரவைமற்றும்புஞ்சைபுளியம்பட்டி சர்வோதய சங்கம் இணைந்து நடத்தினர். இந்த நிகழ்வில் ஈரோடு மாவட்ட தலைவர் ஆர். ஈஸ்வரமூர்த்தி,மாவட்டசெயலாளர்ஆர்.மூர்த்தி ,மாவட்ட பொருளாளர் சங்கர், துணைத் தலைவர்கள் இளங்கோவன், திருமூர்த்தி, இணைச் செயலாளர் மகேஸ்வரன், துணைச் செயலாளர் பரமேஷ், ஒன்றிய தலைவர் சிவக்குமார், நேரு நகர் கிளைச் செயலாளர் ராஜசேகர் ,கங்காதரன் மற்றும் புஞ்சைபுளியம்பட்டி சர்வோதய சங்க தலைவர் பழனிச்சாமி, செயலாளர் வேலுமணி ,பிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.